**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.124/2022**

**பி.வா.சா. –2– பாண்டியன்**

**நாள். 05.08.2024**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.**

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் பாப்பையா கவுண்டர் என்பவரின் வாரிசு என்ற அடிப்படையில் இந்த வழக்கில் உள்ளேன். தொட்டச்சிய கவுண்டர் மூத்த மகன் சுப்பா கவுண்டருக்கு பெரிய சுப்பா கவுண்டர், சின்ன சுப்பா கவுண்டர் ஆகிய இருவர் வாரிசுகள் என்றால் எனக்கு தெரியாது. 10, 11 பிரதிவாதிகள் மட்டும் தான் மாசிய கவுண்டரின் வாரிசுகள். 12 ஆம் பிரதிவாதி மாசிய கவுண்டரின் வாரிசுகள் இல்லை. 10,11,12 பிரதிவாதிகள் மாசிய கவுண்டரின் வாரிசுகள் என்ற கூறி இந்த வழக்கு போட்டுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 4 முதல் 9 பிரதிவாதிகள் மட்டும் தான் பாப்பைய கவுண்டரின் வாரிசுகள் என்றால் சரிதான். 17 முதல் 20 பிரதிவாதிகள் பாப்பைய கபுண்டரின் வாரிசுகள் என்றால் சரியல்ல. வாதிகள் தாக்கல் செய்துள்ள கொடிவழி ஜாபிதா தவறு என்று சொல்லி நான் தனியாக கொடிவழி ஜாபிதா போடவில்லை என்றால் சரியல்ல போட்டுள்ளேன். நானும், பிரதிவாதிகளும் 100 ஆண்டுகளாக தாவா சொத்தை அனுபவித்து வருவதை காண்பிக்க ஆவணங்கள் எதுவும் போட்டுள்ளேனா என்றால் ஆவனங்கள் போட்டுள்ளேன் ஆனால் 100 ஆண்டுகளுக்கு இல்லை. வாதி பழனிச்சாமி 1 முதல் 17 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளார் என்றா விபரம் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். 14.04.1998 ஆவணம்(பி.வா.சா.ஆ.6) 1 ஏக்கர் 33 செண்டில் 1/6 பாகம், 22 செண்டு தான் கிரையம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.7 மொத்தம் 1 ஏக்கர் 32 செண்டு 5/6 பாகம், 1 ஏக்கர் 11 செண்டு என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.8 – 30.06.1998 கிரையம் 1 ஏக்கர் 31 செண்டில் 2/5 பாகம் 44 செண்டு என்றால் சரிதான். வழக்கிற்கு கட்டுப்பட்ட சர்வே எண் எப்போழுது உட்பிரிவு ஆனது என்றால் எனக்கு தெரியும். 1925 ஆம் ஆண்டு உட்பிரிவானது. 1925ல் உட்பிரிவாகவில்லை என்றும், 26.05.2014ஆம் தேதி தான் உட்பிரிவு ஆனது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.11 16.02.1935ஆம் தேதி கிரையம் மொத்தம் 2 ஏக்கர் 83 செண்டில் 1/8 பாகம் 35 செண்டு கிரையம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.12 ன் படி அதே சொத்தை வீரதுமம்மாள்,தொட்டச்சியகவுண்டருக்கும் பாப்பமாளுக்கும் கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 14,15,20

பிரதிவாதிகள் தொட்டடச்சிய கவுண்டரின் வாரிசுகள் இல்லை என்றால் சரியல்ல. அவர்கள் வாரிசுகள் என்று காண்பிக்க கொடி வழி ஜாபிதாவே, வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.6,7,8,11 மற்றும் 12 ஆகிய ஆவணங்களின் படி கிரையம் செய்தது போக மீதம் 32 செண்ட் நிலம் மட்டுமே எங்களுக்கு பாத்தியம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 வாதிகள் போட்டுள்ள பாகப்பிரிவினை பத்திரம் பற்றி தெரியமா என்றால் வழக்கில் தாக்கல் செய்த பின்னர் தெரியவந்தது. வா.சா.ஆ.4 ஆவணம் பற்றி தெரியுமா என்றால் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் தெரிய வந்துள்ளது. மேற்படி பத்திரங்கள் வழக்கிற்கு சம்பந்தமில்லா ஆவணங்கள் என்று எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.13 படி 22.08.2003 தேதி கிரைய பத்திரத்தின் படி சொல்லப்பட்டுள்ள ஆவணங்களின் மூல ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யயவில்லை என்றால் சரியல்ல. அனைத்தும் மூல ஆவணங்கள் தான். எங்களுக்கு விற்றவர்கள் பி.வா.சா,.ஆ.13 கிரையம் செய்தவற்கள் தங்களுக்கு பாத்தியம் இல்லாத சொத்துக்களை மூல ஆவணங்களாக காட்டி பொய்யாக கிரையம் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கு காலவதி சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்பது தவறு என்றும், பாக பிரிவினை வழக்கிற்கு கால வரையறை இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் 1 முதல் 13 பிரதிவாதிகளுக்கும் வாதிகளுக்கும் மட்டுமே வழக்கு சொத்தில் உரிமை உள்ளது என்றும், மற்ற பிரதிவாதிகளுக்கு உரிமை இல்லை என்று சொல்வது சரியல்ல. 14 முதல் 20 பிரதிவாதிகள் மேற்படி சொத்தில் அத்துமீறி நுழைந்தவர்கள் என்றால் சரியல்ல. வாதியின் சகோதரிகளுக்கு அவர்களது தந்தை கோவிந்தசாமி உயில் மூலமாக வேறு சொத்துக்கள் எழுதிக்கொடுத்துள்ளதால் வழக்கு சொத்துகளில் அவர்களுக்கு பாகம் இல்லை என்றும் அதனால் அவர்களை வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க தேவையில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் பாத்தியம் உள்ள நபர்களை தான் தரப்பினர்களாக சேர்க்க வேண்டும் என்றும், பாத்தியம் இல்லாதவர்களை சேர்க்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. 32 செண்ட் இடத்தில் தான் எங்களுக்கு உரிமை உள்ளது என்றும், மற்ற சொத்துக்களில் உரிமை இல்லை என்றால் சரியல்ல.

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN

Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2024.08.03 22:42:17 +0530

Additional District Judge,

Dindigul.